


**07. 10. 2025**

## தலைப்பு செய்திகள்

1. பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள் ஆளுமையுடன் கடந்த 11 ஆண்டுகளில், 25 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. நேரடி பண பரிவர்த்தனை மூலம் 4 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் சேமிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. நாட்டின் உற்பத்தி மையமாக தமிழகம் முன்னேறி வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

4. தமிழகத்தில் வெள்ள தடுப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்தார்.

5. தமிழகம் விளையாட்டு துறையில் தொடர்ந்து முன்னேறி வருவதாக பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி எடுத்துரைத்தார்.

## இனி விரிவான செய்திகள்

************

**பிரதமர்**

நாடு கடந்த 11 ஆண்டுகளில் அளப்பரிய மாற்றங்களுடன், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகளுக்கு ஆளுமை வழங்கி 25 கோடி பேரை வறுமையிலிருந்து மீட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தேச சேவையில் தலைமை ஏற்று 25ஆவது ஆண்டை எட்டியதை ஒட்டி, நாட்டு மக்களின் நம்பகதன்மைக்கும், அன்பிற்கும் நன்றி தெரிவித்த பிரதமர், தேசத்திற்காக சேவையாற்றுவது மிகப்பெரிய கவுரவம் என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

உலகளாவிய பொருளாதாரத்தில் நம்நாடு பிரகாசமான இடத்தில் உள்ளதாகவும், சுகாதாரம், சமூகபாதுகாப்பு திட்டங்களில் முன்னோடி நாடாக நாம் திகழ்வதாகவும் எடுத்துரைத்தார்.

அனைத்து துறைகளிலும் விரிவான சீர்திருத்தங்களுடன் சுயசார்பு பாரதம், முன்னெடுத்துச்செல்லப்படுவதாக கூறிய பிரதமர், அரசியல் அமைப்பு சாசனத்தை வழிகாட்டியாக கொண்டு வளர்ச்சி அடைந்த பாரத கனவை நனவாக்க வரும் காலங்களில் மேலும் அர்ப்பணிப்புடனும், கடினமாகவும் உழைக்க தாம் உறுதி பூண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

2013ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் நிலவிய கொள்கை முடக்கத்தால் 2014ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பிரம்மாண்ட வெற்றியை மக்கள் பெற்றுத்தந்து பிரதமராக தாம் பதவி ஏற்றதை அவர் நினைவு கூர்ந்தார்.

************

**ராஜ்நாத்சிங்**

நாட்டின் பாதுகாப்புத்துறை உள்நாட்டு மூலதனம் சென்ற நிதியாண்டு இறுதியில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்தது என்று மத்திய அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

புதுதில்லியில் பாதுகாப்பு சார்ந்த நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், நம் நாட்டின் பாதுகாப்பு உற்பத்தி, ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியதாகவும், ஏற்றுமதி 24 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

போர் முறைகள் மாறிவருவதால், தொழில்நுட்பம் சார்ந்த, நவீன தளவாடங்களை உருவாக்க மத்திய அரசு உயர் முன்னுரிமையுடன் செயலாற்றிவருவதாக குறிப்பிட்டார்.

கொள்கைகள், அறிவிப்புகளுக்கு அப்பாற்பட்டு பாதுகாப்பு துறையில் தற்சார்பு, முன்னேறிவருவதகாவும் திரு.ராஜ்நாத்சிங் எடுத்துரைத்தார்.

************

**ஜெய்சங்கர்**

பொறுப்புமிகு செயற்கை நுண்ணறிவு செயலாக்கத்தில், நம்பகதன்மையும், பாதுகாப்பும், மிக அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், வரும் காலங்களில் செயற்கை நுண்ணறிவு, பொருளாதார மாற்றம், பணியாற்றும் தன்மை, புதிய சுகாதார தீர்வுகள், கல்விசார் பயன்பாடுகளை மேம்படுத்துதல் போன்றவற்றை செயற்கை நுண்ணறிவு முன்னெடுத்து செல்லும் என்றார்.

உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் வாழ்க்கையில் செயற்கை நுண்ணறிவு பெரும் மாற்றங்களை கொண்டுவரும் என்று அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்நிலையில் செயற்கை நுண்ணறிவு ஆளுமையில் சமச்சீரான அணுகுமுறையின் அவசியத்தை வலியுறுத்திய அவர், குடிமக்களின் மின்னணு தரவுகளை பாதுகாப்பதற்கான வலுவான நெறிமுறைகள் தேவை என்றும் குறிப்பிட்டார்.

************

**நிர்மலா சீதாராமன்**

நேரடி பண பரிவர்த்தனை மூலம் 4 லட்சத்து 31 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சேமிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மும்பையில் இன்று அந்நிய செலாவணி பணபரிவர்த்தனை திட்டத்தை துவக்கிவைத்து பேசிய அவர், விரைவான அந்நிய செலாவணி பண பரிவர்த்தனைக்கு இப்புதியமுறை வழிகோலும் என்றார்.

இப்புதியமுறை அறிமுகம் செய்யப்பட்டதால், ஹாங்காங், டோக்கியோ மணிலா வரிசையில் இந்தியாவும் இணைந்துள்ளதாக அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

நம் நாட்டின் வங்கி சார்ந்த நிதி நுட்ப முறைகளை எடுத்துரைத்த அமைச்சர், தொழில்நுட்பம் மக்களுக்கு சேவையாற்றும் பாலமாக திகழ்வதன் அவசியத்தை குறிப்பிட்டார்.

************

**அனைத்து கட்சி கூட்டம்**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் விரைவில் தொடங்க உள்ள நிலையில் மாநிலங்களவை தலைவரும், குடியரசு துணை தலைவருமான திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் எதிர்கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளின் நாடாளுமன்ற தலைவர்களை புதுதில்லியில் இன்று சந்தித்து பேசுகிறார்.

மாநிலங்களவை தலைவராக திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பொறுப்பேற்றபின்னர் மாநிலங்களவை உறுப்பினர்களுடன் நடைபெறும் முதலாவது கலந்துரையாடல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

************

முதலமைச்சர்

நம் நாட்டின் உற்பத்தி மையமாக தமிழகம் முன்னேறி வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் விண்வெளி பாதுகாப்பு தொழில்களுக்கான சர்வதேச வணிக மாநாடு மற்றும் கருத்தரங்கை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், பல்வேறு வளரும் தொழில்களை கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்றார்.

இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி கொண்ட ஒரே மாநிலம் தமிழகம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் உள்ள கப்பல் கட்டும் துறைமுகங்கள் நாட்டின் பாதுகாப்பு துறைக்கு உறுதுணையாக உள்ளது கூறினார்.

பாதுகாப்பு தொழில்துறை வழிதட திட்டத்தில் இதுவரை 29 ஆயிரம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் 7 ஆண்டுகளில் 75 ஆயிரம் கோடி முதலீடுகளை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

உலகின் வாகன உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 40 விழுக்காடாக உள்ளது என்று கூறிய அவர், மின்னணு உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளதாக எடுத்துரைத்தார்.

கோவை பாரப்பட்டியில் 360 ஏக்கரில் பாதுகாப்பு தொழில்துறை பூங்கா அமைக்கப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

************

**மா.சுப்பிரமணியன் - நேரு**

தமிழ்நாட்டில் டெங்கு உயிரிழப்புகள் குறைந்துள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் சுகாதாரம், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகளுடனான கலந்தாலோசனை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் இன்று பேசிய அமைச்சர் இந்தாண்டு பருவமழை காலங்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்றார்.

மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு பேசுகையில், வெள்ள தடுப்பு பணிகள் மாநிலத்தில் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

நோய்தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

************

**அன்பில் மகேஷ்**

தமிழ்நாட்டில் கட்டாய கல்வி உரிமையின் கீழ், விண்ணப்பிப்பதற்கான காலக்கெடுவை நீட்டிப்பது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்று மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்திற்கு, மத்திய அரசின் நிதி கிடைக்கப்பெறாததால், மாநில அரசே நிதியை ஒதுக்கீடு செய்து செயலாற்றியதாக குறிப்பிட்டார்.

வரும் காலங்களில் கட்டாய கல்வி உரிமை திட்டத்திற்கான நிதியை காலதாமதம் இன்றி மத்திய அரசு விரைந்து வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முன்னதாக திருச்சி அண்ணா விளையாட்டரங்கில் பள்ளி மாணாக்கருக்கான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை தொடங்கிவைத்த அவர் தமிழகம் விளையாட்டு துறையில் தொடர்ந்து முன்னேறி வருவதாக எடுத்துரைத்தார்.

------வாய்ஸ்------

சென்னையில் இன்றுமாலை பள்ளி கல்வித்துறை சார்பில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரித்த தலைமை ஆசிரியர்களை பாராட்டி சான்றிதழ்களை வழங்குவதோடு, கல்வித்துறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவியாளர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் திரு.அன்பில் மகேஷ் வழங்குகிறார்.

************

**கே.கே.எஸ்.எஸ்.ஆர்.**

விருதுநகர் மாவட்டம் அருப்புகோட்டை அருகே கன மழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை மாநில வருவாய் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்தின் இன்று ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதிக்கப்பட்ட வாழைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற பாதிப்பு ஏற்படாமல் தடுக்க வேளாண் துறையுடன் இணைந்து மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தொடர்பாக முதலமைச்சர் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

************

**நாகை**

**நாகை** மாவட்டத்தில் மத்திய அரசின் விதை மானியத்திட்டத்தின் மூலம் விதைநெல் மானிய விலையில் கிடைப்பது பெரிதும் பயனளிப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

- - வாய்ஸ் - -

- ************

**நெல்லை**

நெல்லை மாவட்டத்தில் பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் சேர்க்கை முகாம் வரும் 13ஆம் தேதி நடைபெற உள்ளதால் தகுதியுடையோர் இதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.சுகுமார் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

************

**நீலகிரி சிறுத்தை:**

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் குடியிருப்பு பகுதியில் இரவு நேரங்களில் சுற்றித்திரியும் இரண்டு சிறுத்தைகளை பிடிக்க வனத்துறையினருக்கு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

- - **வாய்ஸ்** - -

- ************

**விசைபடகு மீனவர்கள்**

தூத்துக்குடியில் மீன் எண்ணெய் மற்றும் கோழி தீவனத்திற்கு பயன்படுத்தப்படும் கலசல் மீன்களுக்கு உரிய விலை கோரி விசை படகு மீனவர்கள் இன்று கடலுக்குள் மீன்பிடிக்க செல்லவில்லை.

இதன்காரணமாக மீன்பிடி துறைமுகத்தில் 275க்கும் மேற்பட்ட விசைபடகுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

************

இருவரி

**அரியலூர் மாவட்டத்தில் 16 கோடி ரூபாய்** மதிப்பீட்டில், மேம்பாலம், தார்சாலை உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகளை மாநில போக்குவரத்து துறைஅமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

**பெரம்பலூர் மாவட்டம் செங்குணம், வெங்கலம்,** கொளப்பாடி, காரை கிராமங்களில் பொதுவினியோகத்திட்ட குறைதீர் நாள் கூட்டம் வரும் சனிக்கிழமை நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் **திருமதி.மிருணாளினி** கூறியுள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் சூரிய மின் சக்தி** திட்டத்தின் கீழ் வீடுகளில் சூரிய மின்வசதிக்கான மானியம் வழங்கப்படுவதால் நுகர்வோர் இதனை

பயன்படுத்திக்கொள்ள மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

************

**சிப்காட்**

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார் சத்திரத்தை அடுத்த எச்சூர் கிராமத்தில், சிப்காட் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து, விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் மனுவை இன்று வழங்கினர்.

எச்சூர் ஊராட்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில், விவசாய பணிகள் நடைபெறும் நிலையில், நஞ்சை நிலங்களை சிப்காட் நிறுவனம் எடுத்துக்கொள்ளும் என்பதால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

************

**கபடி**

ப்ரோ கபடி லீக் போட்டியில் சென்னையில் இன்று இரவு 8 மணிக்கு தமிழ்நாடு அணி – பட்னா அணியை எதிர்கொள்கிறது.

இரவு 9 மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் ஹரியானா – தில்லி அணியுடன் மோதுகிறது.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**